தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 28/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(பிற்பகல் 1—10)

**(ஊ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1989.**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

---

*6—5—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஏ) பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றுகையிலிருந்து பாதுகாப்பு) சட்ட முன்வடிவு 1989.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றுகையிலிருந்து பாதுகாப்பு) சட்டமுன்வடிவு *(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 8/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

**திரு. ஜி. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பயிரிடும் குத்தகை விவசாயி களுக்குப் பாதுகாப்பு சட்டமுன்வடிவில் என்னுடைய கருத்தினை நான் சொல்லவிழைகிறேன். 1986 ஆம் ஆண்டு வெள்ளத்தால், வறட்சியால் பாதிக்கப்பட்ட அந்த குத்தகை விவசாயிகளுக்கு 5 தவணையாக கட்ட வேண்டும் என்று சொல்லி அரசால் அன்றைய தினம் சட்டம் இயற்றப்பட்டது. அதன் பிறகு 1987, 1988 ஆகிய இந்த ஆண்டுகளில் தொடர்ச்சியாக வெள்ளம், வறட்சி ஏற்பட்டு, அந்த விவசாயிகளுடைய அந்த குத்தகை பாக்கி என்பது தொடர்ச்சியாக வளர்ந்துகொண்டு வந்திருக்கக்கூடிய நிலைகள் இருக்கின்றன. இன்று இருக்கின்ற அரசு, 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதி வரை அது ஒத்திவைக்கப்பட்டு நிலத்திலிருந்து வெளியேற்றக்கூடாது என்ற சட்ட முன்வடிவை இங்கே கொண்டுவந்து செய்திருக்கின்றார்கள். அது மிகவும் வர வேற்கக்கூடியது. இந்த சந்தர்ப்பத்தில் அதே போன்று அந்த விவசாயிகளுடைய பாக்கிகளை தொடர்ச்சியாக அரசு சொல் கின்ற கணக்குப்படி பார்த்தால் விவசாயிகளுக்கு வறட்சி, வெள் ளம் போன்ற தொடர்ச்சியான பாதிப்பு ஏற்பட்டு அவர்கள் கட்ட முடியாமல் இருக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. அந்த விவ சாயிகளுடைய கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

*10—4—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.